**2013–14ஆம் ஆண்டிற்கான வனத்துறை மானியக் கோரிக்கையின் மீதான மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் உரை**

**1. முன்னுரை:**

**தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், தமிழ் மக்களின் நல்வாழ்விற்காகவும் அல்லும் பகலும் அயராத பாடுபடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி என்னுடைய உரையை துவக்குகிறேன்.**

மண்ணுயிர்க்கெல்லாம் அடைக்கலம் தந்து, மாபெறும் இயற்கை சக்தியாக விளங்குவது காடுகள் எனில், கோடானு கோடி தமிழ் மக்களின் இதய துடிப்பாய் விளங்கி நாட்டையும், காட்டையும் காப்பாற்றும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களை கோடிக்கனக்கான தமிழர்கள் மட்டுமல்லாமல், காடுகளில் வாழும் கோடிக்கனக்கான உயிரினங்களும் உளமாற வாழ்த்துகின்றன.

நவீன உலகின் நரகாசுரனான வீரப்பனை துவம்சம் செய்து, அழித்த சக்தியாக உள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா**அவர்களை, இயற்கை அன்னையின் படைப்புகளாக விளங்கும் காடுகளும் அதிலுள்ள பல கோடி உயிரினங்களும் என்றென்றும் வாழ்த்து பாடி கொண்டிருக்கின்றன.

காடு செழித்தால் நாடு செழிக்கும் என்பது பழமொழி.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் காடும் செழிக்கவில்லை, நாடும் செழிக்கவில்லை.

தி.மு.க.வினர் வீடுதான் செழித்தது.

தமிழகத்தில் உள்ள வளங்களையும், தமிழக மக்களையும் காப்பாற்றி, நல்வழியில் ஆட்சி செய்யும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா,** தங்களின் தலைமையில் எதிர்கால இந்தியா ஒரு வல்லரசாக மாறும் என்பது நிதர்சனமான உண்மை.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் தமிழக முதல்வராக 2001–ஆம் ஆண்டில் பொறுப்பு ஏற்கும்போது தமிழக வனம் மற்றும் மரங்களின் பரப்பளவு 27 லட்சத்து 53 ஆயிரத்து 600 எக்டர் என்ற அளவில் இருந்தது.

2001–ஆம் ஆண்டில் இருந்து **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின், பல்வேறு தொலைநோக்கு திட்டங்களால், தமிழக வனம் மற்றும் மரங்களின் பரப்பளவு 2005–ஆம் ஆண்டு 28 லட்சத்து 66 ஆயிரத்து 500 எக்டர் என்ற அளவில் உயர்ந்தது.

2006–ஆம் ஆண்டு முதல் மைனாரிட்டி தி.மு.க.ஆட்சியில், அழிந்த வன வளம், 2009–ஆம் ஆண்டு நடந்த சர்வே கணக்கின்படி தமிழக வனம் மற்றும் மரங்களின் பரப்பளவு 28 லட்சத்து 30 ஆயிரத்து 600 எக்டர் என்ற அளவில் குறைந்தது.

தரம் தாழ்ந்த காடுகளினாலும், காடுகளின் நிலப்பரப்பு குறைந்ததினாலும், காடுகளில் உள்ள நீர் நிலைகள் அழிக்கப்பட்டதனாலும், காட்டில் உள்ள யானை போன்ற விலங்குகள் உணவுக்காகவும் நீருக்காகவும் காட்டை விட்டு வெளிவரும் அவல நிலைக்கு உள்ளாகிய தமிழக வன வளத்தை மேம்படுத்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் தமிழ்நாட்டின் வன வளம் மேம்படுவதோடு, வனத்தில் வாழும் வன உயிரினங்களும், தங்களின் இயற்கை வாழ்விடமான வனங்களிலேயே, வசிக்கும் வாய்ப்பினை, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் உருவாக்கி தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட வனப்பகுதியின் Eco Value, நிலத்தின் மதிப்பு இல்லாமல், மத்திய அரசின் அங்கிகரிக்கப்பட்ட குழுவின் மதிப்பின்படி, குறைந்தபட்சம் ரூ.2 லட்சம் கோடிக்கும் மேலாகும்.

மேலும் ஒவ்வொரு வருடமும் வனம் மற்றும் வன உயிரின பெருக்கம், தொடர்ந்து நடைபெறும் ஓர் உயிர் சுழற்ச்சி (Biological Cycle) முறையாகும்.

இவ்வளவு முக்கியம் வாய்ந்த வனம் மற்றும் வன உயரினங்களுக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், தொலைநோக்கு பார்வையோடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற ஆணையிட்டுள்ளார்கள்.

**2. வன மற்றும் மரஅடர்த்திப்பரப்பு:**

2011ஆம் ஆண்டைய இந்திய வன அளவை நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி தமிழ்நாட்டின் வனப்பரப்பு 27,625 ச.கி.மீ. அளவிலும், அது மொத்த நிலப்பரப்பில் 18.16 விழுக்காடாக உள்ளது. தேசிய வனக்கொள்கை, 1988ன் படி 33 விழுக்காடு அளவில் இருக்க வேண்டிய வன மற்றும் மரப்பரப்பு 21.79 விழுக்காடு அளவில், அதாவது 28,343 ச.கி.மீ. பரப்பில் அமைந்துள்ளது.

**3. தமிழ்நாட்டின் உயிர்ப்பன்மை சிறப்பு :**

இந்தியாவில் அமைந்துள்ள 16 வகையான வனங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 9 வகைக் காடுகள் அமையப் பெற்றுள்ளன. இவற்றுள் பசுமை மாறாக் காடுகள், ஈர இலையுதிர்காடுகள், உலர் இலையுதிர் காடுகள், முட்காடுகள் மற்றும் அலையாத்திக் காடுகள் ஆகியவை முக்கியமானவையாகும். பல்வகை காடுகளை தன்னகத்தே கொண்டிருக்கின்ற காரணத்தினால் தமிழ்நாட்டின் வனங்களில் உயிர்ப்பன்மை சிறப்பாக அமைந்துள்ளது. உலக அளவில் கண்டறியப்பட்டுள்ள 25 உலகார்ந்த பேரிடங்களில் ஒன்றான மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி தமிழ்நாட்டில் அமையப்பெற்றுள்ளது. உயிர்ப்பன்மையின் ஆதாரமாக விளங்கும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள 39 இடங்கள் யுனெஸ்கோ நிறுவனத்தினால் உலகத் தொன்மை வாய்ந்த இயற்கைத் தலமாக 2012–13ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றுள், தமிழ்நாட்டில் உள்ள களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், திருநெல்வேலி கோட்டப் பகுதிகள், ஸ்ரீவில்லிப்புத்தூர் உயிரினக் காப்பகம், புல்மலை தேசிய பூங்கா, கரியன்சோலை தேசிய பூங்கா மற்றும் முக்குர்த்தி தேசிய பூங்கா ஆகிய ஆறு இடங்கள் அடங்கும்.

**4. வன உயிரினப்பாதுகாப்பு**

வனம் மற்றும் வன உயிரினப் பாதுகாப்பில் மற்றும் மேலாண்மையில் தமிழ்நாடு சிறந்து விளங்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். வன உயிரினங்கள் பெருகுவதற்கு ஏற்ற சூழ்நிலையைக் கொண்ட வனப்பகுதிகளின் பாதுகாப்பினை வலுப்படுத்தும் நோக்குடன் தமிழகத்தின் பல்வேறு வனப்பகுதிகள் வன உயிரினக் காப்பகங்களாகவும், தேசிய பூங்காக்களாகவும், பறவைகள் உய்விடங்களாகவும், அமைக்கப்பட்டுள்ளன. தற்போது வன உயிரினப் பாதுகாப்பிற்கென மாநிலத்தில் மொத்தம் 10 வன உயிரினச் சரணாலயங்கள், 5 தேசியப் பூங்காக்கள் மற்றும் 14 பறவை சரணாலயங்கள் அறிவிக்கப்பட்டு, அவை மாநிலத்தின் மொத்த வனப்பரப்பில் 23.9 விழுக்காடு அளவிற்கு அமைந்துள்ளன. பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் தொடர் அமைப்பு விரிவுபடுத்தப்பட்டு வருவதால் அத்தகைய இடங்களில் வன உயிரினங்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பதற்கு உகந்த சூழ்நிலை உருவாக்கப்படுகிறது.

**4.1. புலிகள் பாதுகாப்பு:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி மற்றும் நிலப்பரப்பு மேலாண்மை கோட்பாடு அடிப்படையில் மாநிலத்தில் புலிகள் காப்பகங்கள் உருவாக்கப்பட்டு, முக்கியத்துவம் வாய்ந்த இவ்விலங்கினங்கள் சிறப்பான முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் களக்காடு–முண்டன்துறை, ஆனைமலை மற்றும் முதுமலை ஆகிய மூன்று புலிகள் காப்பகங்கள் 2,174.59 ச.கி.மீ.பரப்பில் அமைந்துள்ளன. இக்காப்பகங்களை ஒட்டியுள்ள இதர வனப்பகுதிகளும் வன உயிரினப்பாதுகாப்பு முக்கியத்துவம் பெற்ற இடங்களாக இருப்பதால், இம்மூன்று காப்பகங்களுக்கும் சேர்த்து 3,770 ச.கி.மீ.பரப்பளவு கொண்ட வனப்பகுதிகள் மற்றும் வனமற்ற பிற பகுதிகள் இடை தாங்கு மண்டலமாக 2012–13ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக புலிகள் வாழ்வதற்கும் இனப்பெருக்கம் செய்வதற்கும் அதிக வாய்ப்பு உருவாகியுள்ளது.

தேசிய அளவில் புலிகள் பாதுகாப்பில் சிறப்பான செயல் திட்டங்களை மேற்கொண்டுள்ள புலிகள் காப்பகங்களைக் கண்டறிந்து, அவற்றிற்கு உரிய அங்கீகாரம் வழங்கும் வகையில் மத்திய அரசின் தேசிய புலிகள் பாதுகாப்பு அமைப்பு 2012ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள 39 புலிகள் காப்பகங்களுள் 11 காப்பகங்களைத் தேர்வு செய்தது. அவற்றுள் உள்ளூர் மக்கள் மற்றும் சூழல் மேம்பாட்டுப்பணியில் அதிக ஈடுபாட்டுடன்

செயல்பட்டதற்கு முதுமலை புலிகள் காப்பகத்திற்கும், வன உயிரினங்களோடு ஒன்றிய மக்களின் வாழ்க்கை முறையை ஊக்குவித்தற்காகவும், வெளிமண்டல வனப்பகுதியை நல்ல முறையில் பராமரித்தமைக்காகவும் களக்காடு–முண்டன்துறை புலிகள் காப்பகத்திற்கும் நற்சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றது முக்கிய சாதனையாகும்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா**அவர்களின் சீரிய முயற்சியால் ஏற்கனவே வன உயிரினக் காப்பகமாக அறிவிக்கப்பட்டிருந்த சத்தியமங்கலம் வனக்கோட்டத்தின் 1,411.61சகிமீ வனப்பகுதிகள் 2013ஆம் ஆண்டில் மாநிலத்தின் நான்காவது புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2012–13ஆம் ஆண்டில் புலிகள் காப்பகத் திட்டத்தின் கீழ் ரூ.6.33 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பாதுகாப்பு மற்றும் வாழ்விட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 4.2. ஆசிய யானைகள் பாதுகாப்பு நடவடிக்கைகள்:

தேசிய பாரம்பரிய விலங்கினமாக அறிவிக்கப்பட்டுள்ள ஆசிய யானைகள் மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலை வனப்பகுதிகளில் வாழ்கின்றன. யானைகள் அதிகமான எண்ணிக்கையில் வாழும் வனப்பகுதிகள் கண்டறியப்பட்டு 2003ஆம் ஆண்டில் நீலகிரி–கிழக்குத் தொடர்ச்சி மலை, கோயம்புத்தூர், ஆனைமலை மற்றும் திருவில்லிபுத்தூர் ஆகிய நான்கு யானைக்காப்பகங்கள் அறிவிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் மொத்தம் 4,015 யானைகள் வாழ்வதாக அறிவியல் பூர்வமான கணக்கெடுப்பிலிருந்து தெரிகிறது. நிலத்தில் வாழும் விலங்குகளுள் பெரிய விலங்கினமாக உள்ள யானை தனது உணவு மற்றும் நீர் தேவைகளுக்காக பல்வேறு வனப்பகுதிகளுக்கு இடம் பெயரும் தன்மை கொண்டவை. யானைகளுக்குத் தேவைப்படும் உணவை வனப்பகுதிகளுக்குள் அதிகரிக்கும் பொருட்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைப்படி, 2011–12ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை ஐந்து வருட காலத்தில் வனங்களுக்குள் தீவனப் பயிர்த் தோட்டங்கள் மற்றும் பாசனப் பயிர்த்தோட்டங்கள் உருவாக்க அரசு மாநில நிதியிலிருந்து ரூ.20.87 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 2012–2013ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.5.04 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வன உயிரினங்களின் நல வாழ்வில் பெரும் அக்கறை கொண்டுள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா**அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக 2003–04ஆம் ஆண்டில் யானைகளுக்கென புத்துணர்வு முகாம்களை நடத்த ஆணையிட்டார்கள். இவ்வாறான முகாம்கள் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு நடத்தப்பட்டு, அவற்றில் வனத்துறை, பல்வேறு கோயில்கள், மடங்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான சுமார் 100 யானைகள் கலந்து கொண்டு பயனடைந்தன. முகாம் காலத்தில் முகாமிலிருந்த அனைத்து வளர்ப்பு யானைகளுக்கும் ஊட்டச்சத்துடன் கூடிய சிறப்பு உணவு வழங்கப்பட்டதுடன், மருத்துவப் பரிசோதனைகளும்நடத்தப்பட்டது. இம்முகாம்களின் வெளிப்படையான பயனை அறிந்து, தொடர்ந்து 2011–12 மற்றும் 2012–13ஆம் ஆண்டுகளில் சுமார் 80 யானைகளுக்கு சிறப்பு சுகாதார மற்றும் புத்துணர்வு முகாம்கள் 48 நாட்கள் நடத்தப்பட்டன. 2011–12ஆம் ஆண்டில் முதுமலையிலும், 2012–13ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம் தேக்கம்பட்டியிலும் நடந்தன.

## 4.3. மனித–வன உயிரின மோதல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி வன உயிரினப்பாதுகாப்பு நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதால் முக்கியமான வன விலங்குகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கோயம்புத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திண்டுக்கல், கன்னியாகுமரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் யானைகளால் ஏற்படும் இடர் களைவதற்கும், மனித உயிரின மோதலை சமாளிப்பதற்கும், 2011–12ஆம் ஆண்டில் சூரிய மின் வேலி அமைத்தல், யானை புகா அகழிகள் அமைத்தல் போன்ற தடை அரண்களைஅமைக்கும் பணிகள் ரூ.11.70 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன. 2012–13ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.10.56 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்தகைய தடுப்பு அரண்கள் அமைக்கப்பட்ட வன எல்லையில் அமைந்துள்ள கிராமப்பகுதிகளில் யானைகளால் ஏற்படும், பயிர் மற்றும் பொருட்சேதாரம் வெகுவாகக் குறைந்துள்ளது என அறியப்படுகிறது. வன விலங்குகளுக்குத் தேவையான குடிநீர் வனப்பகுதிகளிலேயே கிடைக்கும் விதத்தில் கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் தடுப்பணைகள் அமைக்கப்படுகின்றன. இதுபோக கோடைக்காலங்களில் வனவிலங்குகளுக்கு பயன்படும் வகையில் நீர்த்தொட்டிகளில் லாரிகள் மற்றும் டிராக்டர்கள் மூலம் குடிநீர் நிரப்பும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. தொலைநோக்குப் பார்வையுடன் 1995ஆம் ஆண்டில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா**அவர்களின் 47வது பிறந்தநாளை ஒட்டி மாநிலத்தின் பல்வேறு மாவட்ட வனப்பகுதிகளில் மொத்தம் 47 நீர்த்தொட்டி அமைக்க ஆணையிட்டார்கள்.

இவ்வாறு அமைக்கப்பட்ட நீர்த்தொட்டிகள் வனவிலங்குகளின் நீர் ஆதாரத்தை மேம்படுத்தப் பயன்பட்டன என்றால் மிகையாகாது.

வால்பாறை பகுதியில் யானைகளின் தொடர் நடமாட்டத்தால் தமிழ்நாடு தேயிலைத்தோட்டக்கழக தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுவந்த இன்னல்களைக் கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி ரேயான் தேயிலைக் கோட்டத்தின் 127.95 எக்டேர் நிலம் புலிகள் காப்பகப் பராமரிப்பிற்காக வனத்துறை வசம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.

வன உயிரினங்களின் தாக்குதல்களால் ஏற்படும் இழப்பினை ஈடு செய்யும் விதத்தில் நிவாரணத்தொகை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. 2011–12ஆம் ஆண்டில் அவ்வாறு வழங்கப்படும் நிவாரணத்தொகையினை உயர்த்தி**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டார்கள். மனித உயிரிழப்பு மற்றும் நிரந்தர செயலிழப்பிற்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையினை ரூ.1.50 லட்சத்திலிருந்து ரூ.3 லட்சமாகவும், பயிர் சேதத்திற்கு ஏக்கருக்கு ரூ.15,000லிருந்து ரூ.25,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நிவாரணத்தொகையை உடனுக்குடன், காலதாமதமின்றி வழங்கும் பொருட்டு ரூ.2 கோடியே 50 லட்சம் அளவிலான சுழல் நிதி ஒன்று 2011–12ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 4.4. குரங்குகளால் ஏற்படும் தொல்லைகளைக் கட்டுப்படுத்துதல்

நகர்ப்புறங்களில் பெருமளவு வாழக்கூடிய போனட் குரங்குகள் குடியிருப்புப் பகுதிகளில் நுழைந்து மக்களுக்கு இன்னல்களை தருவதை அறிந்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் சென்னை நகர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் குரங்குகள் பிடிக்கும் பிரிவுகளை அமைக்க ஆணையிட்டார்கள். அதனடிப்படையில், சென்னையில் வேளச்சேரி மற்றும் வண்டலூரில் இரண்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா கால்நடை மருத்துவமனையினை தலைமையிடமாகக் கொண்டு, நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் குரங்களுக்கென பத்து புனர்வாழ்வு மையங்கள் 2012–13ஆம் ஆண்டில் ரூ.2 கோடியே 75 லட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 4.5.மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம்:

கடலோர உயிரினப் பரவலைப் பாதுகாத்தல் மற்றும் கடல் சார்ந்த வளங்களுக்கு ஏற்படும் அழுத்தத்தினை குறைப்பதற்கு மன்னார் வளைகுடாப் பகுதித் திட்டம் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா**அவர்களால் 2002ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. ரூ.140 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்தினை செயல்படுத்த அறக்கட்டளை ஒன்று உருவாக்கப்பட்டது. உயிர்ப்பன்மை சிறப்பின் காரணமாக மன்னார் வளைகுடா 2002–03ஆம் ஆண்டில் வன உயிரினப்பாதுகாப்பு யுனெஸ்கோ இணையதளத்தில் இடம் பெற்றது.

இத்திட்டத்திற்கான சர்வதேச சுற்றுச்சூழல் நிதியம் மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவன திட்ட நிதி உதவி 2012 டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்துள்ளதால், 2013ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் இத்திட்டம் தமிழ்நாடு அரசின் நேரடி பராமரிப்பில் கொண்டு வரப்பட்டுள்ளது. 2013–14 முதல் 2016–17 வரை அறக்கட்டளையின் பணிகளைத் தொடர்வதற்கு ஆண்டொன்றிற்கு ரூ.2 கோடியே 50 லட்சம்வீதம் ரூ.10 கோடி மாநில நிதியிலிருந்து வழங்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா**அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

### 4.6. பள்ளிக்கரணை சதுப்பு நில சூழல் மேம்பாடு:

பள்ளிக்கரணை சதுப்பு நில மேம்பாட்டிற்காக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆணையின்படி பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் ஒரு பகுதி வனத்துறை கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு வன நிலமாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. வன உயிரினப் பாகுபாட்டில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றுள்ள இச்சதுப்பு நிலம் சென்னை பெருநகரத்தின் உள்ளே அமைந்திருப்பதால் பல்வேறு சுற்றுச்சூழல் தாக்கத்திற்கு ஆளாகிறது. எனவே, இச்சதுப்பு நிலத்தின் பாதுகாப்பினை உறுதி செய்து அதன் சூழலியலை நிலைநிறுத்த 2011–12 முதல் 2015–16 வரையிலான ஐந்து ஆண்டுகளில் மாநில நிதியின் கீழ் ரூ.15கோடியே 75 லட்சம் மதிப்பீட்டில் உறைவிட மேம்பாடு, பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் கூர்ந்தாய்வு, விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள **மாண்புமிகு தமிழக**

**முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். 2012–2013ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**4.7. வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா:**

சென்னையை அடுத்த வண்டலூரில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் புலி, சிங்கம், சிங்கவால் குரங்கு, காட்டெருமை போன்ற பல அரிய வன விலங்கினங்கள், உயிரியல் பூங்கா சூழலில், இனப்பெருக்கம் செய்யும் இடமாகவும் இப்பூங்கா திகழ்கிறது. இத்தகைய தனிச்சிறப்புமிகு பூங்காவில் பிறந்த புலிக்குட்டிகளுக்கு 2013ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் பெயர் சூட்டினார்கள்.

வன உயிரியல் பூங்காக்களின் நிர்வாகப் பயன்களை ஒருங்கிணைக்கும் விதத்தில் தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து சிறு வன உயிரின பூங்காக்களும் 2012–13ஆம் ஆண்டில் தமிழ்நாடு உயிரியல் பூங்கா குழுமத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுமம் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களை தலைவராகக் கொண்டுசெயல்படும் சிறப்பினைப் பெற்றது.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மேம்பட்ட வன உயிரின ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பதற்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் மாநில நிதியிலிருந்து ரூ.27 கோடியே 13 லட்சம் ஒப்பளிப்பு வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

**4.8. வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம்:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருகில் மேல் அணைக்கட்டு ஒதுக்குக் காட்டில் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம் (27 நட்சத்திரங்களுக்குரிய மர அல்லது தாவர இனம்) 10 எக்டேர் பரப்பளவில் ரூ.7 கோடியே 35 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. நாட்டின் பல பகுதிகளிலிருந்து வருகை தரும் பக்தர்களுக்கும், சுற்றுலாப்பயணிகளுக்கும் பொழுதுபோக்கு இடமாக பயன்படும் இப்பூங்கா, அழிந்துவரும் மிக அரிய வகை வண்ணத்துப் பூச்சி இனங்களைப் பாதுகாக்க உதவியாக இருக்கும்.

**5. வனப்பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைப்பு :**

வனப்பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். வனத்துறையில் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுப் பிரிவை பலப்படுத்த வனப்பாதுகாப்பு படை வனச்சரகர்களுக்கு 2012–13ஆம் ஆண்டில் 13 ஈப்புகள், வனவர்களுக்கு 26 இருசக்கர வாகனங்கள், 143 கள உபகரணங்கள் மற்றும் தொலை தொடர்பு சாதனங்கள் வழங்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா**அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், சமூகக்காடுகள் மற்றும் விரிவாக்கத் திட்டப் பணிகளை திறம்பட நிறைவேற்றவும், கூர்ந்தாய்வு செய்யவும் உதவி வனப்பாதுகாவலர் மற்றும் வனச்சரகர்களுக்கு 100 ஈப்புகள் வழங்கவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், வனத்துறைப் பணியாளர்களுக்கு ரூ.59 லட்சம் செலவில் மழை அங்கிகள், காலணிகள் மற்றும் பேட்டரி விளக்குகள் வழங்கவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**6. வன மேம்பாட்டுத் திட்டங்கள்:**

**6.1. வனப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்:**

மாநிலத்தின் வனப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் வனப்பரப்பை அதிகரித்து, அதன் தரத்தை மேம்படுத்தவும், வன உயிரினங்கள் வாழும் இடங்களைப் பாதுகாக்கவும், வன நிலங்களின் நீர் சேகரிப்புத்திறனை அதிகரிக்கவும், வன நிர்வாகத்திற்கு உதவியாக கட்டமைப்பினைச் சீராக்கவும் உதவுகின்றன.

**6.1.1. தமிழ்நாடு காடுவளர்ப்புத்திட்டம் நிலை–2:**

2005–06 முதல் 2012–13 வரை செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–2ன் கீழ் 2.09 லட்சம் எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகளும், 193 மலைவாழ் மக்கள் கிராமங்கள் உட்பட 950 கிராமங்களில் வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. 2012–13ஆம் ஆண்டில் ரூ.78.05 கோடி செலவில் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவன மென்கடன் தொகையான ரூ.107.96 கோடி மதிப்பீட்டில் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டார்கள்.

**6.1.2. தமிழ்நாடுஉயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்:**

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் தரம் உயர்த்தப்பட்ட காடுகளில் உள்ள உயிர்ப் பன்மையைக் காத்திடும் நோக்குடன் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி 2011–12 முதல் 2018–19 வரை 8 ஆண்டு காலத்தில் ரூ.686 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் ஜப்பான் பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. உயிர்ப்பன்மை பாதுகாப்பு, இயற்கை வள ஆதாரங்களை அதிகரித்தல் மற்றும் நிறுவனத் திறன் மேம்பாடு ஆகிய இனங்கள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2012–13ஆம் ஆண்டில் ரூ.68 கோடியே 40லட்சம்மதிப்பீட்டில் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**6.1.3. 13வது நிதிக்குழு மானியத் திட்டம்:**

உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் தீத்தடுப்பு மேலாண்மை, உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் காடு வளர்ப்பு, கூட்டு வன மேலாண்மையினைப் பலப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்ட திட்டப்பணிகள் 2012–13ஆம் ஆண்டில் ரூ.39 கோடியே 22லட்சம் மதிப்பீட்டில் 13வது நிதிக்குழு மானிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6.1.4. வன வளர்ச்சி முகமைகள்:**

வனத்தை ஒட்டியுள்ள கிராம மக்களின் துணைகொண்டு வனங்களைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களது சமூகப்பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி செய்தல் ஆகிய நோக்கங்களுடன் தமிழ்நாட்டில் 33 வன வளர்ச்சி முகமைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 2012–13ஆம் ஆண்டில் இத்திட்டங்களுக்கென ரூ.6 கோடியே 70லட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**6.1.5. சிறப்புப்பகுதி மேலாண்மைத் திட்டம்:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி மாநிலத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை அமைந்துள்ள 9 மாவட்டங்களில் வனம் மற்றும் வன உயிரினப்பாதுகாப்புப் பணிகள் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2012–13ஆம் ஆண்டில் ரூ.4.14 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே போன்று, நீலகிரி மாவட்டத்தில் குன்றி வரும் சோலைக்காடுகள் மற்றும் பிற வனஅடர்த்திப் பரப்பினை மேம்படுத்தி, சுற்றுச்சூழலை நிலைநிறுத்த ரூ.6.22 கோடி மதிப்பீட்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**6.1.6. தரங்குன்றிய வனப்பகுதிகளில் நீர் பாதுகாப்பு மற்றும் மர அடர்த்தி மேம்பாடு**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி 2012–13ஆம் ஆண்டில் 50,000 எக்டேர் பரப்பில் கசிவு நீர்க்குட்டைகள் மற்றும் தடுப்பணைகள், நீர்ப்பிடிப்புக்குழிகள் போன்ற நீர் சேகரிப்புக் கட்டமைப்புப் பணிகள் அமைக்க ரூ.47.50 கோடி ஒப்பளிக்கப்பட்டு நடப்பு நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**6.2. மாநிலத்தின் பசுமைப்பரப்பினை அதிகரித்தல்:**

1988ஆம் ஆண்டின் தேசிய வனகொள்கையில் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனம் மற்றும் மரப்பரப்பின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் பசுமைப்பரப்பை அதிகரிப்பதற்கு வனத்திற்கு வெளியே மரம் வளர்ப்பதற்குத் தகுதியான இடங்களைத் தேர்வு செய்து அவற்றில் உகந்த மர வகைகளை நட்டு வளர்ப்பது அவசியமாகிறது. அவ்வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**6.2.1.மாபெரும் மரம் நடவுத்திட்டம்:**

பெருநகரங்கள் மற்றும் நகர்ப்புறத்தை ஒட்டி அமைந்துள்ள வனப்பகுதிகளில் பசுமைப் போர்வையை அதிகரிப்பதன் மூலம் காற்று மாசினை வெகுவாகக் கட்டுப்படுத்த முடியும். நகர்ப்புறங்களின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடன், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் 64வது பிறந்தநாளை முன்னிட்டு 32 மாவட்டங்களில் 64 லட்சம் மரக்கன்றுகள் 2011–12 மற்றும்

2012–13ஆம் ஆண்டில் ரூ. 29.44 கோடி மதிப்பீட்டில் நட்டு பராமரிக்கப்பட்டன. இத்திட்டத்தில் கண்ட வெற்றியின் அடிப்படையில் 2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் மொத்தம் 65 லட்சம் மரக்கன்றுகள் நட்டு வளர்ப்பதற்கு ரூ.43.55 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் 20.02.2013 அன்று மெரினா கடற்கரை சாலையில் நீச்சல் குளத்திற்கு அருகில் ஒரு ஆலமரக்கன்றினை நட்டு துவக்கி வைத்தார்கள்.

**6.2.2. தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல் திட்டம்:**

2011–12ஆம் ஆண்டில் துவங்கிய தமிழ்நாடு உயிர்ப்பன்மை மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் ஒரு அங்கமாக தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் ஐந்தாண்டு காலத்தில் தனியார் தரிசு நிலங்களிலும், ஊடுபயிராகவும் 10 கோடி மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்படும். இதன் மூலம் மொத்தம் 1,43,000 எக்டேர் பரப்பிலுள்ள நிலங்களில் பசுமைப்பரப்பு அதிகரிக்கப்படும்.

**6.2.3. படுகை நிலங்களில் தேக்கு மரங்கள் வளர்த்தல்:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையன்படி மாநிலத்தின் தடிமர வளத்தைப் பெருக்கவும், காப்புக் காடுகளுக்கு வெளியே பசுமைப் பரப்பினை அதிகப்படுத்தவும், மண் அரிமானத்தைத் தடுக்கவும் 2012–13ஆம் ஆண்டில் ரூ.9.06 கோடி மதிப்பீட்டில் 6475 எக்டேர் பரப்பில் தேக்குமரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு, பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**6.2.4. தானே புயல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறு உற்பத்தி:**

தானே புயலின் போது ஏராளமான மரங்கள் வேருடன் பெயர்த்தெறியப்பட்டதால், கடலூர் மற்றும் விழுப்புரம் போன்ற கடலோர மாவட்டங்கள் பெரும் சேதத்திற்குள்ளாகின. எனவே, தேக்கு, சவுக்கு, தைலம் போன்ற மரவகைகளை மறுநடவு செய்து இப்பகுதிகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வர 2012–13ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.7.48 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது

**6.2.5.கண்மாய் தோட்டங்கள்:**

ஊரகப் பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிக்கவும், கண்மாய் பகுதிகளில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும் ரூ.330 கோடி மதிப்பீட்டில் ஒரு லட்சம் எக்டேர் பரப்பில் கண்மாய் தோட்டங்கள் வளர்க்க ஒரு விரிவான திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. 2012–13ஆம் ஆண்டில் ரூ.9.80 கோடி மதிப்பீட்டில் கண்மாய் தோட்டங்கள் எழுப்பும் பணி நடைபெற்றுள்ளது.

**6.2.6. பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்குதல்**

நகர்ப்புறங்களில் சுற்றுச்சூழல் சீர்கேடு அடைந்து வருவதைத் தடுக்கவும், வருங்கால சந்ததியினரான மாணவர்களிடம் இளம் வயதிலேயே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு 2012–13ஆம் ஆண்டில் ஐந்து லட்சம் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

**6.3. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்:**

பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பழங்குடியினர் கிராமப் பகுதிகளில் கச்சா வீடுகளை மேம்படுத்துதல், சாலை மேம்பாடு, வனத்துறை பள்ளிகள் மேம்பாடு போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு 2012–13ஆம் ஆண்டில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி ரூ.10.10 கோடி மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**7. மனித வள மேம்பாடு :**

தமிழ்நாடு வனத்துறையில் பல்வேறு நிலைகளில் மொத்தம் 10,923 பணியிடங்கள் அங்கீகரிக்கப்பட்டு, தற்போது 8,742 பணியாளர்கள் உள்ளனர்.சுமார் 20 விழுக்காடு அளவிற்கு காலிப்பணியிடங்கள் இருக்கின்ற காரணத்தினால் வனப்பாதுகாப்பு மற்றும் வன வளர்ச்சிப் பணிகளை சுணக்கமின்றி மேற்கொள்வது பெரும் சவாலாக உள்ளது.இதனை எதிர்கொள்ள பாதுகாப்பு தொடர்புடைய பணியிடங்களை நிரப்புவதற்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா**அவர்களின் ஆணையின்ன்டி

தமிழ்நாடு வனத்துறை சீருடைப்பணியாளர் நியமனக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. வனத்துறையில் மனித ஆற்றலை மேம்படுத்தும் விதத்தில் கோவையிலுள்ள தமிழ்நாடு உயர்பயிற்சிக் கழகத்திலும், வைகை அணை தமிழ்நாடு வனவியல் கல்லூரியிலும் **306** பணியாளர்களுக்கு வன மேலாண்மை பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

## 9. முடிவுரை:

இந்தியாவின் எதிர்காலம் இந்திய வரைபடத்தின் தெற்கில் அமைந்துள்ள, தமிழகத்தை ஆட்சி செய்யும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், என்பதை அறிந்து கொண்ட அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், இந்திய சுற்றுப்பயணத்தின்போது சென்னையில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களை சந்தித்தார்கள்.

தன்னம்பிக்கையையும், துணிச்சலையும், எதற்கும் கலங்காத மன உறுதியையும், ஆளுமைத்திறன், தலைமைபண்பு, அரவணைத்து செல்லும் குணம், போன்ற உயர்ந்த பண்புகளையும், ஒருசேர பெற்றிருக்கின்ற **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் நல்லாட்சியில், தமிழகம் எல்லா துறைகளிலும் வளர்ச்சிப் பாதையை நோக்கி, பீடு நடைபோடுகிறது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

வளர்ந்த விருட்சத்தை நம்பி எப்படி பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்றனவோ, அதைபோலவே மக்களால், மக்களுக்காக, மக்களினால், உருவான மக்கள் தலைவி, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், பாகுபாடு பாராமல், அனைத்து தரப்பு மக்களும் வளம் பெற, பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தி அல்லும் பகலும், அயராது பாடுபடுகிறார்கள்.

தமிழகத்தின் கோடிக்கனக்கான தொண்டர்களில் ஒருவனாகிய என்னுடைய ஒவ்வொரு சுவாசமும், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா,** தங்கள் பொற்பாதங்களுக்கு விசுவாசமாக இருக்கும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் நல்லாசியுடன் **2013–14**ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் குறித்த அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.